**Vol. 6, Issue – 2** **Pg. No. 51 - 62**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

## திருக்குறளில் எண்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் சிந்தனைகள்

*முனைவர் ம.சரளாதேவி,*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),*
*திருப்பத்தூர்- 635601,*
*saraladevi@shctpt.edu*

==============================================================

*குழந்தைப் பருவத்தில் இருந்து வயது முதிர்ந்தவர் வரை மனிதனின் வாழ்வில் எண்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. எண்கள் இல்லாமல் எதுவும் இல்லை என்று கூறும் அளவிற்கு வாழ்க்கை முறை அமைந்துள்ளது. எண்கள் ஒன்றின் எண்ணிக்கையைக் குறிக்க, அளவிட உதவுகின்றன. எழுத்துகளைவிட எண்கள் மனிதனின் வேலையை எளிதாக்குகிறது. “எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்” (கொன்றை வேந்தன்.7) என்பதற்கு ஏற்ப எண்ணிக்கை அடிப்படையில் ஒரு கருத்தைக் கூறும்பொழுது மனதில் எளிமையாகப் பதிந்து விடுகின்றது.*

*”எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு” (குறள்.392)*

இந்த உத்தியைத் திருவள்ளுவர் திருக்குறளில் அதிக இடங்களில் பயன்படுத்தியுள்ளதை இக்காலத்துடன் ஒப்பிட்டு ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**திருக்குறளில் எண்கள்**

திருக்குறளில் எண்களைக் குறளின் இடையிலும் இறுதியிலும் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். அதில் குறட்பாக்களுக்கு இடையில் அதிகமாகக் கையாண்டுள்ளார்

ஒன்று - 109, 156, 259, 397, 398, 400, 454, 609, 661, 773, 835, 836, 838, 871, 875, 932, 974, 1023, 1026, 1052, 1095, 1196, 1197, 1202, 1266, 1269, 1274, 1275 ஒன்று, ஒருவன், ஒன்றன் என்பதன் அடிப்படையில் பயன்படுத்தியுள்ளார்.

இரண்டு – 19, 392, 393, 402, 455, 581, 662, 674, 760, 875, 920, 992, 1022, 1108, 1196, 1247 இரண்டு, இரு என்பதன் அடிப்படையில் இரண்டு என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளார்.

மூன்று – 41, 360, 383, 589, 682, 684, 688, 941, 952, 1085 மூன்று, மூன்றின், மூன்றன், மூவர், மூவர்க்கும் என்பதன் அடிப்படையில் மூன்று என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளார்.

நான்கு – 35, 382, 501, 513, 605, 743, 766, 950, 953 நான்கும், நான்கின், நான்கே என்பதன் அடிப்படையில் நான்கு என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளார்.

ஐந்து – 24, 27, 43, 271, 343, 632, 675, 738, 939, 983, 1101 ஐந்தும், ஐந்தின், ஐந்தன், ஐந்து என்பதன் அடிப்படையில் ஐந்து என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆறு – 381 ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

ஏழு – 62, 107, 126, 398, 538, 835, 1269, 1278 எழுமை, எழு என்பதன் அடிப்படையில் ஏழு என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளார்.

எட்டு – 9 ஒரு இடத்தில் மட்டும் பயன்படுத்தியுள்ளார்.

ஒன்பது – ஒரு இடத்தில் கூடப் பயன்படுத்தவில்லை.

பத்து – 450 ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

நூறு – 932 ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

ஆயிரம் – 259 ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

கோடி- 337, 377, 639, 816, 817, 954, 1005, 1061

போன்ற இடங்களில் எண்களைப் பயன்படுத்தி வாழ்வியல் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். இதில் ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்கள் மட்டும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**ஒன்று**

ஒன்று என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவர் வாழ்க்கைக்கு உகந்த செய்திகளை அதிகமாகக் கூறியுள்ளார்

”கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்” (குறள்.109)

நன்மையே செய்து வந்த ஒருவர் இடையில் கொலையை ஒத்த கொடுமை செய்தாலும் அவர் முன் செய்த நன்மைகளுள் ஒன்றை நினைத்தாலே தீமைகள் மறந்து போகும்.

”நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை” (மூதுரை.10)

நல்லவர் ஒருவருக்குப் பெய்யும் மழை நீர் எல்லாருக்கும் பயன்படும் என்று மூதுரையும் திருக்குறளைப்போன்று நல்லதையே நினைக்கவேண்டும் நல்லவற்றையே செய்யவேண்டும் என்ற கருத்தை ஒன்று என்ற எண்ணின் அடிப்படையில் இரண்டு நூல்களும் எடுத்துரைக்கின்றன.

ஒன்று ஒருமையையும் இறையுணர்வையும் வீடு பேற்றையும் குறிக்கும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பழமொழியில் இருந்து தமிழரின் கடவுள் கொள்கையை உணரமுடியும். ஒரு வார்த்தை கூறினாலும் திருவார்த்தை கூறினார் என்றும், ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு என்றும், திரைப்பட அடிப்படையில் நான் ஒருமுறை கூறினால் நூறுமுறை கூறியதற்குச் சமம் என்னும் சொல் வழக்காறுகள் இக்காலத்தில் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. திருக்குறளைப்போன்று ஒன்று என்ற எண் நல்லவற்றை எடுத்துரைப்பதற்கே இக்காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது

**இரண்டு**

இரண்டு என்ற எண்ணின் அடிப்படையில் மனிதர்களின் பண்புகளை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

*''அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு'' (குறள்.992)*

சிறந்த குடிப்பெருமை, அன்பான குணம் இவை இரண்டும் உடையவர்களுக்குச் சிறந்த பண்புகள் இயல்பாக அமையும்.

*''கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு*
*செல்வமுஞ் செல்வ மெனப்படும்'' (நீதிநெறி விளக்கம்.16)*

சான்றோரால் பாராட்டப்படும் கல்வியும் பொருளுடைமையும் பணிவால் சிறப்பு அடையும் என்று நீதிநெறி விளக்கம் குறிப்பிடுகின்றது. மனிதன் சிறந்த பண்புடையவனாக இருந்தால் எல்லாச் செல்வங்களும் இயல்பாக வந்து சேரும் என்ற கருத்தை இரண்டு நூல்களும் எடுத்துரைக்கின்றன.

இக்காலத்தில் நாம் இருவர் நமக்கு இருவர் என்றும், இரண்டு வாய் சாப்பிட்டு வந்துவிடுகிறேன் என்றும் இரண்டு நாளில் கொடுத்து விடுகின்றேன் என்றும் இரண்டும் கெட்டான் வயது போன்ற சொல் வழக்காறுகளை மக்களிடத்தில் காணமுடிகின்றது. இரண்டு என்ற எண் பெரும்பான்மை

திருக்குறளைப்போன்று பண்பை உணர்த்துவதற்கே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

**மூன்று**

ஒவ்வொருவரும் எத்தகைய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை மூன்று என்ற எண்ணின் அடிப்படையில் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

*''ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்*
*இழுக்கார் குடிப்பிறந் தார்'' (குறள்.952)*

நல்ல நடத்தை, உண்மை பேசுதல், தவறு செய்ய வெட்கப்படுதல் ஆகிய இம்மூன்றும் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒருநாளும் கைவிடமாட்டார்கள்.

*''முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றுஅற்று ஒருபொருளைத்*
*தப்பாமல் தன்னுள் பெறான்ஆயின்'' (நல்வழி.39)*

ஒருவனுடைய முப்பதாம் வயது அளவில் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் ஒழிக்க வேண்டும் என்ற செய்தியை நல்வழி எடுத்துரைக்கின்றது. செய்ய வேண்டியவை செய்யக் கூடாதவை ஆகியவற்றை மூன்று என்ற எண்ணின் அடிப்படையிலேயே திருக்குறளும் நல்வழியும் எடுத்துரைக்கின்றன.

மூவேந்தர்கள், முத்தமிழ், முக்கனிகள், மூன்று உலகம், மூக்காலம் போன்றவற்றிற்கே மூன்று என்ற எண் பயன்படுத்தப்படுகின்றது.

**நான்கு**

மனிதன் எத்தகைய குணங்களைப் பெற்றிருக்கக் கூடாது என்ற செய்திகளையும் திருவள்ளுவர் நான்கு என்ற எண்ணின் வழி எடுத்துரைத்துள்ளார்.

*''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்.'' (குறள்.35)*

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இந்த நான்கும் இன்றி செம்மையாகச் செயல்படுவதே அறமாகும்.

*"தந்தைஉரை தட்டினவன் தாய்உரை இகழ்ந்தோன்*
*அந்தம்உறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்*
*சந்தம்உறு வேதநெறி தாண்டின இந்நால்வர்*
*செந்தழலின் வாயினிடை சேர்வது மெய்கண்டீர்" (விவேக சிந்தாமணி.69)*

தந்தையின் சொல்லைக் கேளாது மீறி நடந்தவன், தாய்ச்சொல்லை இகழ்ந்து ஒதுக்கியவன், நல்ல குருவின் ஆணையை மறந்தவன், அழகிய வேத நெறிகளைக் கடந்தவன் என்னும் இந்த நால்வரும் சிவந்த தீயில் சேர்வது நிச்சயமாகும்.

நான்கு என்ற எண்ணின் அடிப்படையில் தீய குணங்களையும் தீய செயல்களையும் நீக்க வேண்டும் என்று திருக்குறளும் விவேக சிந்தாமணியும் எடுத்துரைக்கின்றன.

இக்காலத்தில் நாலு வாய் சாப்பிட்டு போங்கள் என்றும் நாலு நால முடித்துக் கொடுத்துவிடுகின்றேன் என்றும் நாலு காசு இருந்தால்தான் மதிப்பு என்றும் நாலுபேர் நாலுவிதமாகப் பேசுவார்கள் என்றும் நாலுபேருக்குத் தெரிந்தால் என்னவாகும் போன்ற தொடர்கள் வழக்கத்தில் காணப்படுகின்றன.

**ஐந்து**

ஐந்து என்ற எண்ணைக் குறிக்க பெரும்பாலும் ஐம்பொறி, ஐம்பூதங்கள் பற்றிய செய்திகளையே திருவள்ளுவர் அதிகம் பயன்படுத்தியுள்ளார்.

*"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்.675)*

*ஒரு செயலில் ஈடுபடுவதற்கு முன் பொருள், கருவி, காலம், இடம், இவற்றோடு வினையின் தன்மையையும் தெளிவாக எண்ணிச் செயல்பட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.*

*"பொய்ப்புலன்கள் ஐந்துநோய் புல்லியர்பால்" (நன்னெறி.11)*

*பொய்யாகிய ஐந்து புலன்கள் என்று நன்னெறியும்*

*"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய எல்லாம் ஒருங்கு" (குறள்.343)*

*ஐம்புலன்களை அறிவினால் கட்டுப்படுத்த வேண்டும் என்று திருக்குறளும் எடுத்துரைக்கின்றது. ஐந்து பிள்ளைகளைப் பெற்றால் அரசனும் ஆண்டி என்ற பழமொழி இக்காலத்திலும் உள்ளது. இதன்மூலம் ஐம்புல அடக்கத்தையே எடுத்துரைத்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.*

***ஆறு***

*ஆறு என்ற எண்ணைத் திருவள்ளுவர் ஒரு குறளில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்*

*"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு" (குறள்.381)*

*படை, குடிமக்கள், பொருள், அமைச்சர், நட்பு, அரண் ஆகிய ஆறு உறுப்புகளும் குறைவின்றி உடையவன் அரசர்களுள் தலைசிறந்தவன் ஆவான்.*

*"அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட" (நாலடியார்.1)*

*அறுசுவை உணவை உண்டவர்களும் வறுமை நிலையை அடைய நேரிடும் என்ற செய்தியை நாலடியார் எடுத்துரைக்கின்றது. வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு அதனால் நல்ல பண்புகளைப் பெற்று வாழவேண்டும் என்ற கருத்தை எடுத்துரைக்கின்றன. ஆறுபடை வீடு, அறுசுவை உணவு என்பனவற்றிற்கு இக்காலத்தில் ஆறு என்ற எண்ணைப் பயன்படுத்துகின்றோம்.*

**ஏழு**

ஏழு என்ற எண்ணைத் திருவள்ளுவர் பெரும்பாலும் ஏழு பிறவிகளைக் குறிப்பதற்கே பயன்படுத்தியுள்ளார்.

*"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள்.126)*

ஒருவன் இப்பிறவியில் ஆமையைப்போல புலன்களை அடக்கி வாழ்ந்து வந்தால், அவ்வொழுக்கம் அவனுக்கு ஏழேழ் தலைமுறைக்கும் பாதுகாப்பைத் தரும்.

*"ஆன முதலில் அதிகம் செலவானால்*
*மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை*
*எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்*
*நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" (நல்வழி.25)*

வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்பவன் மானங்கெட்டு அறிவு இழந்து, திருடனாகி, ஏழு பிறப்பிலும் தீயவனாகி நல்லவர்களுக்குத் துன்பம் தருபவனாகவும் ஆவான் என்பதை நல்வழி எடுத்துரைக்கின்றது. ஏழு என்ற எண்ணைப் பெரும்பான்மை ஏழு பிறப்பு, ஏழு அதிசயங்கள், ஏழு கண்டங்கள், ஏழுமலையான் போன்றவற்றிற்கு எடுத்துரைக்கின்றனர்.

**எட்டு**

இறைவன் எட்டு வகைப்பட்ட குணங்களை உடையவன் என்ற பொருள் தோன்றும் வகையில் எண் குணத்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

*"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை" (குறள்.9)*

*"1. தன் வயத்தம், 2. தூய்மை, 3. இயற்கையறிவு, 4.முற்றறிவு, 5.கட்டின்மை, 6.பேரருள், 7.எல்லாம்வன்மை, 8.வரம்பிலின்பம்." என்று (இரா.மோகன், திருக்குறளில் எண்களின் ஆட்சி, திருக்குறள் தேசியக் கருத்தரங்கம்) குறிப்பிட்டுள்ளார்.*

*''தன்னுடன் பிறவாத் தம்பி*
*தனைப்பெறாத் தாயார் தந்தை*
*அன்னிய ரிடத்துச் செல்வம்*
*அரும்பொருள் வேசி யாசை*
*மன்னிய ஏட்டின் கல்வி*
*மறுமனை யாட்டி வாழ்க்கை*
*இன்னவாம் எட்டும் சார்ந்த*
*இடுக்கத்துக்கு உதவா அன்றே'' (விவேக சிந்தாமணி.18)*

*உடன் பிறவாத தம்பி, தன்னைப் பெறாத தாய் தந்தை, அயலவரிடம் உள்ள செல்வம், கைக்குக் கிடைத்தற்கு அரிய பொருள், வேசியரிடம் ஆசை, பொருந்திய ஏட்டில் எழுதியிருக்கும் கல்வி, பிறன் மனைவியுடன் கூடிய வாழ்க்கை என்னும் இவை எட்டும் துன்பம் வந்தபோது உதவாது என்பதை விவேக சிந்தாமணி குறிப்பிடுகின்றது.*

*தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறியுள்ளார்.*

*''நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று*
*அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'' (தொல்.1197)*
*''மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்*
*துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே''*

*1.பிரமம், 2.பிரசாபத்தியம், 3.ஆரிடம், 4.தெய்வம், 5.கந்தருவம், 6.அசுரம், 7.இராக்கதம், 8.பைசாசம் என்று திருமண முறைகளை எட்டு வகையாகக் கூறுகின்றார் தொல்காப்பியர்.*

*இறைவன் எட்டு வகைப்பட்ட குணங்களை உடையவன் என்கின்றார் திருவள்ளுவர். விவேக சிந்தாமணி துன்பம் வந்தநிலையில் உதவாதவை எவை என்பதை எட்டு என்ற எண்ணின் அடிப்படையில் எடுத்துரைக்கின்றது.*

எட்டு என்ற எண் தெய்வத்தையும் மக்கள் வாழ்க்கையின் பிணைப்பான திருமண முறையையும் உடல் சார்ந்த மெய்ப்பாட்டினையும் உணர்த்தும் வகையில் வெளிப்படுகின்றது.

**ஒன்பது**

ஒன்பது என்ற எண்ணைத் திருவள்ளுவர் தம் நூலில் பயன்படுத்தவில்லை.

**பத்து**

திருவள்ளுவர் பெரியவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பண்புடையவர் என்பதை திருக்குறளின் வழியாக அறிய முடிகின்றது.

*''பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்'' (குறள்.450)*

நற்பண்புகளுடைய பெரியோரின் நட்பைக் கைவிடுவது பலருடைய பகைக்கு ஆட்படுவதைவிட பத்து மடங்கு தீமை தரக்கூடியது.

*''மானம் குலக்கல்வி வண்மை அறிவுடைமை*
*தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை – தேனின்*
*கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்*
*பசிவந் திடப்பறந்து போம்.''(நல்வழி.26)*

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்ற செய்தியை நல்வழி எடுத்துரைக்கின்றது.

நன்னூல் பத்து வகை அழகு குறித்து எடுத்துரைக்கின்றது.

*''சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்*
*நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்*
*ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்*
*முறையின் வைப்பே உலகம்மலை யாமை*
*விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது*
*ஆகுதல் நூலிற்கு அழகுஎனும் பத்தே'' (எழுத்து.13)*

பணம்பத்தும் செய்யும் என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது. அத்தகைய பணம் நம்மிடமிருந்தால் என்னென்ன பண்புகள் நம்மை வந்து அடையும் என்பதையும் கூறியுள்ளனர் அவை

*1. பேராசை, 2. தீய இச்சை, 3. கஞ்சத்தனம், 4. காதல், 5. அகம்பாவம், 6. பொறாமை, 7. ஆடம்பரம் 8. அகங்காரம், 9. கர்வம், 10. கெடுமனம் போன்ற பத்து தீய குணங்கள் நம்மை வந்து சேரும் என்பதை எடுத்துரைக்கின்றனர்.*

*பெரும்பான்மை நல்ல குணங்களை வெளிப்படுத்துவதற்கே பத்து என்ற எண்ணைப் பயன்படுத்தியுள்ளனர்.*

**முடிவாக**

மனிதர்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய செய்திகள் குறித்தும். பின்பற்றக் கூடாத செய்திகள் குறித்தும் மிகத் தெளிவாகவும் மிக எளிமையாகவும் எண்களின் அடிப்படையில் கூறியிருப்பது வாழ்வியல் சிந்தனைகளைத் தூண்டக்கூடிய வகையில் அமைந்துள்ளன. குழந்தைகளிடத்திலும் பாமர மக்களிடத்திலும் எண்கள் அடிப்படையில் இந்தச் செய்திகளை எடுத்துரைக்கும்போது மிக விரைவில் அவர்கள் மனதில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பது பதியும் என்பதில் ஐயமில்லை.

**துணைநின்ற நூல்கள்**


1. ஜெ. நாராயணசாமி, திருக்குறள், சுரதா பதிப்பகம், சென்னை, 2011.
2. அ.மாணிக்கம், நாலடியார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
3. கொன்றைவேந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
4. மூதுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
5. நல்வழி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
6. நன்னெறி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.

7. நீதிநெறி விளக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
8. அ.மாணிக்கம், விவேக சிந்தாமணி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.
9. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2003.